# கோவை மெடிக்கல் சென்டரில் ரத்த புற்றுநோய்க்கு சிறப்பு சிகிச்சை



ராஜசேகர்

கோவை, மே 25:ரத்த புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் சிறப்பு சிகிச்சை அளிக்கப்படுவதாக டாக்டர் ராஜசேகர் தெரிவித்தார்.

கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சை மையம் உள்ளது. இம்மையத்தின் ரத்தம் மற்றும் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் ராஜசேகர் கூறியதாவது:

குருதி துறை தனித்துவம் வாய்ந்த துறையாகும். ரத்தம் மற்றும் ரத்தம் சார்ந்த நோய்களை கண்டறிந்து சிகிச்சை அளிக்க ஹெமட்டலாஜிஸ்ட் நிபுணர் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது.

ரத்தம் சார்ந்த நோய்களுடன் காணப்படும் நோயாளிக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டால் உடல் நிலையில் முன்னேற்றம் அடையலாம். ரத்தம் சார்ந்த நோய் சிறு குழந்தை முதல் முதியவர் வரை அனைத்து தரப்பு வயதினருக்கும் வரும். ரத்த புற்றுநோய் ஆரம்ப நிலையில் கண்டுபிடிக்கப்பட்டு உரிய சிகிச்சை அளித்தால் குணப்படுத்த முடியும்.

எலும்பு மஞ்சை மாற்று சிகிச்சை மூலம் ரத்த புற்று நோய்க்கு நிரந்தர தீர்வு காணலாம். ரத்தம் சம்பந்தப்பட்ட நோயாளிகள் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பதால் அவர்களுக்கு சிகிச்சைஅளிக்க கோவை மெடிக்கல் சென்டரில் தனிக்குழு உள்ளது.

இதற்காக இங்கு நவீன கருவிகளுடன் டே கேர் சென்டர் செயல்படுகிறது. எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சை முறை கோவையிலேயே, கோவை மெடிக்கல் சென்டரில் முதன்முறையாக ஆரம்பிக்கப்பட உள்ளது.

எலும்பு மஜ்ஜையில் இருக்கும் செல்கள் கேன்சராக மாறும் போது ரத்தப்புற்றுநோய் ஏற்படுகிறது. இதற்கு எலும்பு மஞ்சை மாற்று சிகிச்சை அளிக்கப்படுகிறது. அதாவது, எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சை என்பது உடம்பில் ஸ்டெம் செல் இருந்தால் அதை அழித்து விட்டு புதிய ஸ்டெம் செல் வைக்கப்படும்.

விட்டு விட்டு காய்ச்சல் வருதல், ரத்த சோகை போன்ற பிரச்னை இருந்தால் ரத்தபுற்றுநோயின் ஆரம்ப அறிகுறியாகும்.

ரத்த புற்று நோயினை முன் கூட்டியே தடுக்க முடியாது. பாதிப்பு வந்தால் குணப்படுத்தலாம். ரத்த புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் சிறப்பு சிகிச்சை அளிக்கப்படுகிறது.